

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 09 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி 02 – புதன்கிழமை 19 ஆகஸ்ட் 2026 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 09 : Thiruvalluvar Year - 2057 - Aavani 02 - Wednesday 19 August 2026 - Kovai ★★ 8 Pages ₹ 5.00


## கழகத்துக்கும் கலைஞருக்கும் தன் இறுதிமூச்சு வரை உண்மையாக இருந்த

# களங்கமில்லாத திராவிடத் தீரர் முரசொலி மாறன்!



முத்தமிழறிஞர் கலைஞரின் மனச்சாட்சி அரசியல் மாமேதை முரசொலி மாறன் அவர்களின் 93வது பிறந்த நாளினை முன்னிட்டு நேற்று முன்தினம் (17.8.2026 திங்கட்கிழமை) காலை 9.30 மணியளவில் கோடம்பாக்கம், 'முரசொலி' அலுவலகத்தில் அமைந்துள்ள முரசொலி மாறன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் க.பொன்முடி, ஆ.இராசா, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா, மாவட்டச் செயலாளர்கள் மா.சுப்பிரமணியன், நே.சிற்றரசு, கழக சட்டத் துறை இணைச் செயலாளர்கள் இ.பரந்தாமன், கே.எஸ்.ரவிச்சந்திரன் உள்ளிட்ட கழக முன்னணியினர், முரசொலி பொது மேலாளர் எஸ்.இராஜசேகரன் மற்றும் முரசொலி அலுவலக ஊழியர்கள் பங்கேற்றனர்.

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, ஆக. 19 -**

**"கழகத்துக்கும் கலைஞருக்கும் தன் இறுதி மூச்சு வரை உண்மையாக இருந்த களங்கமில்லாத திராவிடத் தீரர் முரசொலி மாறன் அவர்கள்" என்று அவரது பிறந்த நாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் புகழாரம் சூட்டியுள்ளார்.**

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

**கழகத்துக்கும் தலைவர் கலைஞருக்கும் தன் இறுதிமூச்சு வரை உண்மையாக இருந்த களங்கமில்லாத திராவிடத் தீரர் முரசொலி மாறன் அவர்களின் பிறந்தநாளில் அவரது பங்களிப்புகளைப் போற்றி வணங்குகிறேன்.**

**அண்ணாவின் தம்பியாக அவர் ஆற்றிய உரைகளும் எழுதிய நூல்களும் நம் இயக்கத்தின் இளைய தலைமுறையினர் ஒவ்வொருவரும் பயின்றாக வேண்டிய பாடப்புத்தகங்கள்.**

**ஓர் எளிய தஞ்சை டெல்டா மைந்தன் டெல்லி வரை சென்று தடம் பதித்தார். பின்பு தோகா வரை சென்று இந்தியா மட்டுமில்லாமல், உலகின் வளரும் நாடுகள் அனைத்துக்காகவும் வாதாடினார். எத்தனை உயரம் சென்றாலும் அந்தப் புகழை எல்லாம் கலைஞருக்கே காணிக்கையாக்கிய முரசொலி மாறன் அவர்களின் புகழ் வாழிய வாழியவே!**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

## '100 நாள் சாதனை' என்று பெருமை பேசும் த.வெ.க. ஆட்சியில் – கடந்த

# 100 நாட்களில் நாள்தோறும் கொலைகள் - சந்தி சிரிக்கும் சட்டம் ஒழுங்கு!

## பேரவையில் - குற்றச் சம்பவங்களை அடுக்கடுக்காகப் பட்டியலிட்டு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சரமாரி குற்றச்சாட்டு!

**சென்னை, ஆக. 19 -**

**"100 நாள் சாதனை என்று பெருமை பேசும் த.வெ.க. ஆட்சியில் கடந்த 100 நாட்களில் நாள்தோறும் கொலைகள் நடைபெற்று வருகின்றன. சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது" என்று கொலைக் குற்றச் சம்பவங்களை அடுக்கடுக்காகப் பட்டியலிட்டு சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சரமாரியாக குற்றஞ்சாட்டினார்.**

சட்டப் பேரவையில், கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீது எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

"மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு வாரத்தில் மட்டும் தமிழ்நாடு முழுக்க ஏராளமான கொலைகள் நடந்திருக்கின்றன.

### 20 பேர் கொண்ட ஒரு கும்பல்

முக்கியமாக கோவையில், கள்ளக்குறிச்சியைச் சேர்ந்த ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்த 19 வயது பொறியியல் மாணவர் அமுதனை 20 பேர் கொண்ட ஒரு கும்பல் கடந்த திங்கட்கிழமை அடித்துக் கொன்றுள்ளார்கள். இந்தப் பிரச்சினையை ஏற்கனவே இந்த அவையில் நான் எழுப்பும்போது, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், இது ஒரு கோஷ்டி பூசல் தகராறினால் நடந்த கொலை என்று சொல்லியிருக்கிறார்.

10 பேர் மோதிக்கொண்டு 10 பேருக்கும் இடையில் சண்டை நடந்து கொலை நடந்திருந்தால், அது கோஷ்டி பூசல். ஆனால், ஒரு மாணவனைக் கிட்டத்தட்ட 20 பேர் சேர்ந்து அடித்திருக்கிறார்கள். எனவே, இது ஒரு படுகொலை.

மாணவர் அமுதன் விஷயத்தில் கோவை, செட்டிப்பாளையம் போலீசார் அமுதனை வழக்கு ஒன்றின் விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு வரச் சொல்லியுள்ளார்கள். அப்போது, அந்த போதைப் பொருள் கும்பல் பற்றி, அமுதனிடம் தகவலைக் கேட்டு வாங்கியிருக்கிறார்கள். தகவல் வாங்கிய காவல்துறை, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நியாயமாக அந்த போதைப் பொருட்களைப் பறிமுதல் செய்திருக்க வேண்டும். ஆனால், போதைப்பொருள் பயன்பாடு பற்றி தகவல் தந்த அமுதனின் தகவல்களைக் குற்றவாளிகளிடமே பகிர்ந்துள்ளார்கள். அதுதான் அமுதனின் மரணத்திற்கு முக்கியமான காரணமாக அமைந்திருக்கிறது.

### அமுதனின் பெற்றோர்

இதை நான் மட்டும் சொல்லவில்லை. அமுதனின் பெற்றோர் இருவரும் சொல்லியிருக்கிறார்கள். அவரின் தாய், தந்தை இருவருமே என்னிடத்தில் தொலைபேசியில் அழைத்து பேசியிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு ஆறுதல் சொல்லி இருக்கிறேன். அப்படி அவர்கள் பேசும் போது, போதைப்பொருள் கும்பல் பற்றி, காவல் துறையினரிடம் தகவல் கொடுத்ததால்தான் அமுதன் கொலை செய்யப்பட்டதாக அவர்கள் உறுதியாக நம்புகிறார்கள். அதைத்தான் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த வழக்குத் தொடர்பாக கள ஆய்வு செய்த பல்வேறு சமூக ஆர்வலர்களும், இதே குற்றச்சாட்டை முன் வைக்கிறார்கள். இந்தச் சம்பவத்துக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று, நேற்றைய தினம் எங்கள் கழகத் தலைவர் அவர்களது உத்தரவின்படி, ஒருங்கிணைந்த கள்ளக்குறிச்சி மாவட்டக் கழகம் சார்பாக, கிட்டத்தட்ட 10 ஆயிரம் பேர் பங்கேற்ற ஒரு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை கள்ளக்குறிச்சி நகரத்தில் நடத்தி இருக்கிறோம். இந்தக் கொலையை ஏதோ ஒரு தனிப்பட்ட சம்பவமாகவோ அல்லது கோஷ்டிப் பூசலாகவோ நாம் கடந்து போக முடியாது. அரசின் அலட்சியத்தால், காவல்துறையின் பொறுப்பற்ற போக்கால்தான் இந்தக் கொலை நடந்திருக்கிறது என்பதுதான் குற்றச்சாட்டு.



எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் சட்டப்பேரவைக்கு வருகை தந்த போது எடுத்த படம்!

மாணவர் அமுதன் கொலையில் சம்பந்தப்பட்டவர்களுக்குக் கடுமையான தண்டனையை நாம் வாங்கி கொடுக்க வேண்டும். அதே மாதிரி குற்றவாளிகளுக்குத் தகவல் கொடுத்ததாகக் குற்றம் சாட்டப்படுகின்ற காவல் துறையினரின் மேல் உடனடியாகக் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். போதைக் கலாச்சாரத்தை எதிர்த்து, நிற்கின்ற ஒவ்வொருவருக்கும் விடப்படுகின்ற ஒரு எச்சரிக்கைதான் இந்த சம்பவம்.

### சென்னையிலும் ஒரு சம்பவம்

கோவையில் மட்டுமல்ல, சென்னையிலும் இதேமாதிரி ஒரு சம்பவம் கடந்த 14ஆம் தேதி நடந்திருக்கிறது. சென்னை திருவொற்றியூரில் அரசுப் பள்ளியில் 12ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த மாணவரின் பெயர் தனுஷ். அவர் போதைப் பொருள் கும்பலைத் தட்டிக்கேட்டிருக்கிறார். அதற்காக, பட்டப்பகலில் சுமார் 30 பேர் கொண்ட கும்பல் தனுஷை அடித்துக் கொலை செய்திருக்கிறார்கள்.

இந்த அரசு போதைப்பொருள் தடுப்புப் படையை உருவாக்கி இருக்கிறோம் என்று சொல்கிறது. அதைச் சொல்லி பல கோடி ரூபாயில் விளம்பரம் எல்லாம் செய்திருக்கிறீர்கள். ஆனால், களத்தில் நடப்பதைப் பார்த்தால், இன்று வேறு மாதிரி இருக்கிறது. ஒரு சில நாட்களில் குற்றச் சம்பவங்களை மட்டும் இங்கே அவையில் பதிய வைக்க விரும்புகிறேன்.

### காஞ்சிபுரத்தில் இரட்டைக் கொலை!

நேற்றிரவு, காஞ்சிபுரம் அருகே படுநெல்லி கிராமத்தில் கோயில் திருவிழாவின்போது, போதைப் பொருள் கும்பலின் அட்டகாசத்தைக் கேள்வி கேட்ட சந்துரு, விக்கி என்ற இரண்டு இளைஞர்களை, அந்தக் கும்பல் வெட்டிக் கொலை செய்துள்ளது.

### குற்றச் சம்பவங்களின் பட்டியல்

ஆகஸ்ட் 11ஆம் தேதி அன்று திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில் தனலட்சுமி, பூவரசி என்ற தாய், மகளை சேர்த்து இரட்டை கொலை செய்துள்ளார்கள்.

ஆகஸ்ட் 12ஆம் தேதி சென்னை அம்பத்தூரில், ஆட்டோவில் வைத்து வைதேகி என்ற இளம் பெண்ணை கழுத்தை அறுத்துக் கொடூரமாகக் கொலை செய்துள்ளார்கள்.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்